மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

சென்னை 6-5-2019 (திங்கட்கிழமை) 8 பக்கம் 500 காசு ★★★ | மலர் 42 இதழ் 142



என்.சி.சி. மாணவர்களுக்கு யோகா பயிற்சி அளிக்கப்பட்ட காட்சி.

## காட்பாடி காந்திநகர் 10-வது பட்டாலியன்

# என்.சி.சி. மாணவர்கள் 500 பேர் யோகா பயிற்சி

வேலூர், மே.6-

வேலூர் காட்பாடி காந்திநகர் 10-வது பட்டாலியன் தேசிய மாணவர் படை மாணவர்களது கூட்டு வருடாந்திர பயிற்சி முகாம் விஐடியில் நடைபெற்று வருகிறது.

### சிறப்பு முகாம்

முகாமில் இன்று என்.சி.சி. மாணவர்கள் யோகா பயிற்சி மேற்கொண்டனர். 500 மாணவ, மாணவிகள் (என்.சி.சி) கலந்து கொண்ட யோகா பயிற்சிக்கு 10-வது பட்டாலியன் கமாண்டிங் ஆபீசர் கர்னல் டி.பி.சார்லஸ் தலைமை தாங்கினார். நிர்வாக அதிகாரி லெப்டினன்ட் கர்னல் சுமித் ரஞ்சன் முன்னிலை வகித்தார்.

### யோகா பயிற்சி

வேதாத்திரி மகரிஷி மன வளக்கலையின் துணை பேராசிரியர் பலராமன் தலைமையில் குழுவினர் வேலூர் விஐடி முகாமில் இருக்கும் என்.சி.சி மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கினர். பேராசிரியர் பலராமன் யோகாவின் அவசியங்கள், பல்வகை ஆசனங்களின் பயன்கள் ஆகியவைகளை விளக்கி பயிற்சி வழங்கினார்.

என்.சி.சி. மாணவர்களுடன் துணை முகாம் அதிகாரி லெப்டினன்ட் கர்னல் சுமித் ரஞ்சன், சுபேதார் மேஜர் அருண்குமார் திவிபேடி, என்.சி.சி 10-வது பட்டாலியன் மக்கள் தொடர்பு அலுவலர் ராஜா, விக்ரமன், ரவிசங்கர் பாபு, பாக்கியலட்சுமி, சோமசேகர், அன்பழகன், பார்த்திபன், ஜெயகிருஷ்ணன், தியாகராஜன், பாபு அருள் பிரசாத், பட்டாலியனின் சுபேதார்கள் பவித்திரன், வினோத், முருகன், சதிஷ், பட்டாலியன் அவில்தார் மேஜர் கணேசன் ஆகியோரும் யோகா பயிற்சிகள் மேற்கொண்டனர்.

முடிவில் என்.சி.சி மக்கள் தொடர்பு அலுவலர் ராஜா நன்றி கூறினார்.